1970 நவம்பர் 26]

திரு. எஸ். இராமச்சந்திரன் : செஞ்சேனை என்ற படை வைத்து அதன் மூலமாகவும் இத்தகைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் நக்சல்பாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து ஆங்காங்குள்ள பொதுமக்கள், தமிழ்ப் பெருமக்கள் அதைக் கண்டிக்கும் வகையில் இத்தகைய ஊர்வலங்களை நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட தகவல்களும் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தையல் தொழில் பயிற்சி

*3 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடப் பிரிவில் (Craft) ஆண்களுக்கும் தையல் தொழில் கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுதுள்ள பாட முறையின்படியே 8, 9 வகுப்புகளில் படித்து வரும் மாணவ மாணவியருக்கு துணைத் தொழிற்பாடமாகத் தையல் தொழில் கற்றுக்கொடுக்க இடமுண்டு. போதுமான எண்ணிக்கையில் மாணவ மாணவியர் தையல் தொழில் கற்றுக்கொள்ள முன்வரும் பள்ளிகளிலெல்லாம் தையல் தொழில் கற்றுக்கொடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : இந்த மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்கள் என்னென்ன ? அது இந்த மாணவர்களின் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கிறது என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கைத்தொழில்கள் என்ற முறையில்— Drawing, Painting, gardening spinning and weaving, paper work, clay modelling, wood work, needle work, metal work
ஆகியனவும், பிறகு சப்சிடியரி தொழில்கள் என்ற வகையில் எட்டாவது, ஒன்பதாவது படித்தவர்களுக்கு— Tailoring, electric wiring, leather work, book-binding, clay modelling
ஆகியனவும் கற்றுத்தரப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகப் பிரிவு

*4 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியில் பல்கலைக்கழகப் பிரிவு (University Centre) ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் துவக்க உத்தேசித்துள்ளது ?